Total Pages: 10

88 JNUEE: Question Papers (2010-2012) Rs.10/-

**ENTRANCE EXAMINATION, 2012**

M.Phil./Ph.D. TAMIL

[ Field of Study Code : TAMP (129) ]

*Time Allowed* : 3 hours *Maximum Marks* : 70

மொத்தம் ஐந்து கேள்விகளுக்கு விடையிறுக்கவும்

கடைசிக் கேள்வியில்(9 அ to ஏ )ஏதாவது ஒன்றிற்கு உரிய விடை கட்டாயம் ஆகும்

எல்லாக் கேள்விகளுக்கும் ஒத்த மதிப்பெண்கள்

1.சங்க இலக்கியம் கூறும் சங்க காலப் பண்பாட்டை இதுவரை கண்டுபிடித்துள்ள தொல்லியல் சான்றுகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து கூறுக.

2.தமிழில் உரையாசிரியர்கள் ஆற்றிய இலக்கியத்திறனாய்வுப் பணிகளை மதிப்பிடுக.

3. தமிழ் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் தொல்காப்பியரும் அவருக்குப் பின் தோன்றிய இலக்கண ஆசிரியர்களும் விவரித்த முறைகளை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

4.தமிழ் யாப்பிலக்கணத்தின் அடிப்படைகளை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

5.தற்காலத் தமிழ்ப் புதின வரலாற்றை ஆராய்க.

6.விடுதலைப் போரில் தமிழ் இலக்கியம் அல்லது சமுதாய மறுமலர்ச்சிக்குத் தற்காலத் தமிழ் இலக்கியம் வகித்து வரும் பங்கை இலக்கிய இயக்கங்களின் எழுச்சியையும் வளர்ச்சியையும் ஒட்டி விளக்குக.

7.ஒப்பிலக்கியக் கோட்பாடுகளை விளக்கி ஒப்பிலக்கிய நோக்கில் எழுந்த ஏதாவது திறனாய்வு நூலை மதிப்பிட்டுரைக்க.

8.தமிழில் நீவிர் படித்த கவிதையால் இயன்ற இலக்கியத்தையோ இலக்கியப் பகுதியையோ (எ.டு.சங்க இலக்கியம் ,சிற்றிலக்கியம் )திறனாய்ந்து கூறுக.

9.கீழ்க் கண்டவவற்றுள் ( அ – எ )ஏதேனும் ஒன்றினுக்கு விடை தருக

அ.தமிழில் நாட்டார் கதைப் பாடல்கள் பற்றி விளக்குக.
ஆ.புலம்பெயர்ந்தோர் தமிழ் இலக்கியம் பற்றி ஆராய்க.
இ.தமிழில் மொழி பெயர்ப்பு முன்னோடிகள் பற்றி விளக்குக.
ஈ.தற்காலத் தமிழில் அறிவியல் வளர்ச்சியை மதிப்பிடுக .
உ.தமிழ் நாடகம், திரைப்படம் இவற்றின் வளர்ச்சியை மதிப்பிடுக.
ஊ.தமிழ் இலக்கியத்தில் காவிய காலம் அல்லது பக்திக் காலம் பற்றி மதிப்பிடுக.

எ.கீழ்வரும் கவிதையைத் திறனாய்வு செய்க-

தன் வழி தவறி
அறைக்குள் சிக்கிய
பட்டாம்பூச்சி துவக்கிற்று
தன் தேடலை.

மோதி அதிரும் சுவர்களில்
பரவும் அதன் வர்ணங்கள்
திறக்காத கதவுகளில்
வழியேதுமிருப்பதில்லை.

கதவுகளின் வைராக்கியத்தில்
சிதையும் அதன் நம்பிக்கைகள்
உதிர்ந்துவிட்ட வர்ணங்கள்
நீண்டதொரு தேம்புதலை
உருவாக்கும் அதனிடத்தில்.

அலையலையாப் படரும்
தனிமையினுள் தன் வழி
பற்றிய அறிதல்களினூடே
அமிழ்ந்து போகும்.

என்றேனும்
கதவு திறந்து வழி கிடைக்குமெனில்
அது பறந்துதான் போகும்
வர்ணங்கள் இல்லையென்றாலும் கூட.

- சல்மா

# ENTRANCE EXAMINATION, 2012

## M.Phil./Ph.D. TAMIL

[ Field of Study Code : TAMP (129) ]

*Time Allowed* : 3 hours *Maximum Marks* : 70

மொத்தம் ஐந்து கேள்விகளுக்கு விடையிறுக்கவும்

கடைசிக் கேள்வியில்(9 அ to ஏ )ஏதாவது ஒன்றிற்கு உரிய விடை கட்டாயம் ஆகும்

எல்லாக் கேள்விகளுக்கும் ஒத்த மதிப்பெண்கள்

1.சங்க இலக்கியம் கூறும் சங்க காலப் பண்பாட்டை இதுவரை கண்டுபிடித்துள்ள தொல்லியல் சான்றுகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து கூறுக.

2.தமிழில் உரையாசிரியர்கள் ஆற்றிய இலக்கியத்திறனாய்வுப் பணிகளை மதிப்பிடுக.

3. தமிழ் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் தொல்காப்பியரும் அவருக்குப் பின் தோன்றிய இலக்கண ஆசிரியர்களும் விவரித்த முறைகளை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

4.தமிழ் யாப்பிலக்கணத்தின் அடிப்படைகளை எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

5.தற்காலத் தமிழ்ப் புதின வரலாற்றை ஆராய்க.

6.விடுதலைப் போரில் தமிழ் இலக்கியம் அல்லது சமுதாய மறுமலர்ச்சிக்குத் தற்காலத் தமிழ் இலக்கியம் வகித்து வரும் பங்கை இலக்கிய இயக்கங்களின் எழுச்சியையும் வளர்ச்சியையும் ஒட்டி விளக்குக.

7.ஒப்பிலக்கியக் கோட்பாடுகளை விளக்கி ஒப்பிலக்கிய நோக்கில் எழுந்த ஏதாவது திறனாய்வு நூலை மதிப்பிட்டுரைக்க.

8.தமிழில் நீவிர் படித்த கவிதையால் இயன்ற இலக்கியத்தையோ இலக்கியப் பகுதியையோ (எ.டு.சங்க இலக்கியம் ,சிற்றிலக்கியம் )திறனாய்ந்து கூறுக.

**ஏ.கீழ்க்கண்ட வினாக்களுக்குரிய சரியான விடையின் குறியீட்டை விடைத்தாளில் எழுதுக (எ.டு. ஏ.,I,X)**
**ஒவ்வொரு விடைக்கும் ஒவ்வொரு மதிப்பெண்**

I.பிராகுயி மொழி

A. மங்கோலிய மொழி. B.இந்தோ ஆரிய மொழி C.திராவிட மொழி
D. ஆப்பிரிக்க மொழி

II.சதுரகராதி என்பது

A.சதுர வடிவில் அமைந்தது
B.எழுத்து சொல் பொருள் அணி பற்றியது
C.பெயரகராதி பொருளகராதி தொகையகராதி தொடையகராதி என்ற நான்கு பகுதிகள் கொண்டது
D.சதுர் வேதங்களைப்பற்றியது

III.மேல் உதடும் கீழ் உதடும் சேரப்பிறக்கும் ஒலிகள்

A.த.ந B.ப.ம C.ய.வ D.ர.ற

IV.மகன் .மதலை .புத்திரன். பிள்ளை.தனையன் போன்ற சொற்கள்

A. பலபொருள் ஒரு சொல் B. ஒரு பெயர்ப் பொதுச் சொல்
C. ஒருபொருட்பன்மொழி D.வேறு வினைப் பொதுச் சொல்

V. He ate quickly "அவன் விரைந்து சாப்பிட்டான்" என்பது

A. தழுவல் மொழிபெயர்ப்பு B. ஒலி பெயர்ப்பு
C. நேரடிமொழிபெயர்ப்பு D. மொழியாக்கம்

VI.கீழ்க்கண்டவற்றுள் உடம்படு மெய்க்கு ஏற்ற எடுத்துக் காட்டு

A. பாயால் B. கதவால் C. கிளியால் D. சிறப்பால்

VII.வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு

இதிலுள்ள அணி

A. வஞ்சப்புகழ்ச்சி அணி B. தற்குறிப்பேற்றம்
C. பிறிதுமொழிதல் D. எடுத்துக் காட்டுவமை

VIII.முற்றும் வெண்சீர் வெண்டளையால் வந்த அடியைச் சுட்டுக

A.யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
B.பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
C.கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி
D.கற்க கசடறக் கற்பவை கற்றபின்

IX .மெய்க்கீர்த்தி என்பது

A. ஒரு அரசனின் பெயர்
B. கல்வெட்டுக்களில் அரசனின் புகழைப் பாடும் முன்னுரைப்பகுதியாகவும் இலக்கிய வகையாகவும் அமைவது
C.ஒரு வகை எழுத்தின் பெயர்
D.ஒரு அணியின் பெயர்

X. பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புக

உழிஞை தானே .............புறனே

A. நெய்தற் B.மருதத்துப் C.பாலைப் D.முல்லைப்

XI..நாடோடிக் கதைகளில் ஒரு வகையான வினா நிலைக் கதை ஒரு வினாவுடன் முடியும்....இதற்கு எடுத்துக் காட்டு

A. மரியாதை ராமன் கதைகள் B. தெனாலி ராமன் கதைகள்
C. பஞ்ச தந்திரக் கதைகள் D. விக்கிரமாதித்தன் கதைகள்

XII.தமிழில் சமுகவியல் எதார்த்த வாதப் புதினங்கள் மிகுதியும் எழுதியவர்

A.கல்கி B.ல.சா.ரா C.சாண்டில்யன் D.ஜெயகாந்தன்

XIII. குழுவிலிருந்து வேறுபடும் படைப்பு எது?

A. பிரபஞ்சனின் வானம் வசப்படும் B ,எஸ்,ராமகிருஷ்ணனின் உறுபசி
C. கே.ஏ.குணசேகரனின் வடு D .பாமாவின் கருக்கு

XIV.சென்ரியு என்ற ஜப்பானியக் கவிதை வடிவத்தில் தமிழில் அதிகம் கவிதை எழுதி வருபவர்

A. ஞானக்கூத்தன் B.சிற்பி C.குட்டி ரேவதி D.ஈரோடு தமிழன்பன்

* * *

VIII.முற்றும் வெண்சீர் வெண்டளையால் வந்த அடியைச் சுட்டுக

A.யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
B.பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
C.கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி
D.கற்க கசடறக் கற்பவை கற்றபின்

IX .மெய்க்கீர்த்தி என்பது

A. ஒரு அரசனின் பெயர்
B. கல்வெட்டுக்களில் அரசனின் புகழைப் பாடும் முன்னுரைப்பகுதியாகவும் இலக்கிய வகையாகவும் அமைவது
C.ஒரு வகை எழுத்தின் பெயர்
D.ஒரு அணியின் பெயர்

X. பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புக

உழிஞை தானே ..............புறனே

A.நெய்தற் B.மருதத்துப் C.பாலைப் D.முல்லைப்

XI..நாடோடிக் கதைகளில் ஒரு வகையான வினா நிலைக் கதை ஒரு வினாவுடன் முடியும்....இதற்கு எடுத்துக் காட்டு

A. மரியாதை ராமன் கதைகள்
B. தெனாலி ராமன் கதைகள்
C. பஞ்ச தந்திரக் கதைகள்
D. விக்கிரமாதித்தன் கதைகள்

XII.தமிழில் சமுகவியல் எதார்த்த வாதப் புதினங்கள் மிகுதியும் எழுதியவர்

A.கல்கி B.ல.சா.ரா C.சாண்டில்யன் D.ஜெயகாந்தன்

XIII. குழுவிலிருந்து வேறுபடும் படைப்பு எது?

A. பிரபஞ்சனின் வானம் வசப்படும் B .எஸ்,ராமகிருஷ்ணனின் உறுபசி
C. கே.ஏ.குணசேகரனின் வடு D .பாமாவின் கருக்கு

XIV.சென்ரியு என்ற ஜப்பானியக் கவிதை வடிவத்தில் தமிழில் அதிகம் கவிதை எழுதி வருபவர்

A.ஞானக்கூத்தன் B.சிற்பி C.குட்டி ரேவதி D.ஈரோடு தமிழன்பன்

* * *

4188